IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 56/2022

Deposition of Witness : DW 1

Name : கோபால் (வயது – 62)

Father's Name /W/o : த/பெ பொன்னுசாமி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பெருங்களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 14.08.2025.

## குறுக்கு விசாரணை

வாதி என் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எந்த சொத்துக்கு மற்றும் எவ்வளவு அளவிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் சர்வே எண்.234/2 மற்றும் 2 ஏக்கர் 2 செண்ட். மேற்படி சர்வே எண்ணுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாவாவை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். தாவா சொத்து விபரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

சர்வே எண்.234/2 அரசு ஆவணத்தின் படி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி வழக்கு சர்வே எண்.234/2 உட்பிரிவு செய்த பிறகு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் தந்தை பெயர் பொன்னுசாமி பண்டிதரா என்றால் சரிதான். தாவா சொத்து என் தந்தை மூலமாக நான் வாரிசு என்பதால் உரிமை கோரியுள்ளேனா என்றால் சரிதான்.